RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 144 | மே.30, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## போரை தடுத்து நிறுத்தியதாக ட்ரம்ப் 8 முறை கூறி விட்டார்; ஆனால், பிரதமர் மோடி? காங். கேள்வி

சென்னை, மே.30-

“வணிகத்தைப் பயன்படுத்தி இந்தியா பாகிஸ்தான் போரை தான் தடுத்து நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த 11 நாட்களில் 8 முறை கூறி விட்டார். ஆனால், பிரதமர் நரேந்திர மோடி முற்றிலும் மவுனமாக இருக்கிறார்” என்று காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், “கடந்த 11 நாட்களில் அமெரிக்கா, சவுதி அரேபியா மற்றும் கத்தார் ஆகிய 3 நாடுகளில் போர் நிறுத்தம் தன்னால் ஏற்பட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 8 முறை கூறியுள்ளார். மேலும், இதற்காக வரிகளைப் பயன்படுத்தியுள்ளேன் என்றும், போர் நிறுத்தத்தை ஏற்படுத்தினால் சர்வதேச வர்த்தகம் அதிகரிக்கும் என்று இரு நாடுகளிடமும் கூறியுள்ளேன் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஆனால், நமது வெளியுறவு அமைச்சர் இது குறித்து மவுனமாக இருக்கிறார், நமது பிரதமர் முற்றிலும் மவுனமாக இருக்கிறார். இந்தியாவையும் பாகிஸ்தானையும் நான் ஒரே படகில் ஏற்றிவிட்டேன் என்று ட்ரம்ப் தெளிவாகக் கூறியுள்ளார். பாகிஸ்தானின் பொருளாதாரத்துடன் ஒப்பிடும்போது இந்தியாவின் பொருளாதாரம் 10 மடங்கு அதிகரித்துள்ளது, ஆனால் இரண்டும் ஒரே படகில் ஏறுவது எப்படி நடக்கும்?

பொருளாதாரக் கொள்கைகள் குறித்த விமர்சன விவாதங்களை விட பாராட்டுகளையே நமது பிரதமர் விரும்புகிறார். அதனால்தான் அவர் இவ்விஷயத்தில் அமைதியாக இருக்கிறார். பிரதமர் எதுவும் சொல்லவில்லை.

தேசிய பிரச்சினைகளை புறக்கணித்துவிட்டு, அவசரநிலையின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் பிரதமர் மோடி கவனம் செலுத்துகிறார். ஜூன் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் அவசரநிலையின் 50வது ஆண்டு நிறைவை நினைவுபடுத்தும் நோக்கில் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை அரசு கூட்டலாம் என்று கூறப்படுகிறது.

2014 முதல் நம் நாட்டில் அறிவிக்கப்படாத அவசரநிலை அமலில் உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என்பதற்கு அவர் ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்த விரும்புகிறார்? இன்றைய கேள்விகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்ப, அவர்கள் அதைப் பற்றிப் பேசுகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் பங்கையும் நாங்கள் அம்பலப்படுத்துவோம், முழு நாட்டிற்கும் முன்னால் யதார்த்தத்தை வைப்போம். பஹல்காமில் நான்கு பயங்கரவாதிகள் தாக்குதல்களில் ஈடுபட்டனர். இன்னும் அவர்கள் இங்கும் அங்கும் சுற்றித் திரிகிறார்கள். நமது எம்.பி.க்களும் சுற்றித் திரிகிறார்கள், பயங்கரவாதிகளும் சுற்றித் திரிகிறார்கள். ஆனால், காங்கிரஸ் முன்வைக்கும் கேள்விகளுக்கு ஆட்சியாளர்கள் பதிலளிக்கவில்லை.

பாஜக காங்கிரஸ் கட்சியை மட்டுமே குறிவைக்கிறது. அவர்களின் தாக்குதல் பயங்கரவாதிகள் மீது இருக்க வேண்டும். பாகிஸ்தானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதிகள் கைது செய்யப்பட வேண்டும். ஆனால், ஒவ்வொரு நாளும் ஏவப்படும் ஏவுகணைகள் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஏவப்படுகின்றன.

அனைத்துக் கட்சி கூட்டம் நடத்த வேண்டும் என்றும், பிரதமர் அதற்கு தலைமை தாங்க வேண்டும் என்றும் நாங்கள் கோரினோம். இரண்டு முறை அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால், அது ஒரு சம்பிரதாயமாகவே நடந்து முடிந்தது. பாதுகாப்பு அமைச்சர் அதற்கு தலைமை தாங்கினார். அதில் இருந்து எதுவும் வெளிவரவில்லை; எந்த விவாதமும் நடக்கவில்லை. நாங்கள் கேட்ட ஆக்கப்பூர்வமான, தீவிரமான, உணர்ச்சி பூர்வமான கேள்விகளுக்கு எந்த பதிலும் இல்லை. மே 10 அன்று, கார்கேயும் ராகுல் காந்தியும் பிரதமருக்கு மக்களவை மற்றும் மாநிலங்களவையின் சிறப்பு கூட்டத்தொடரை கூட்டுமாறு கேட்டு கடிதம் எழுதினர்.

பயங்கரவாத பிரச்சினை தொடர்பாக, 1994 பிப்ரவரி 22 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தைப் போல் மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்று காங்கிரஸ் விரும்பியது.

கடந்த 30 ஆண்டுகளில், இரு நாடுகளும் அணு ஆயுத நாடுகளாக மாறிவிட்டன, அதற்கும் மேலாக, பாகிஸ்தானில் சீனாவின் பங்கு ஆழமாகிவிட்டது; இது நமக்கு ஒரு சவாலாகவும் உள்ளது. எனவே இது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும். மேலும் ஒருமித்த தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும், இதனால் உலகிற்கு ஒரு கூட்டுத் தீர்மானத்தின் செய்தி வழங்கப்படும். ஆனால், பிரதமர் மோடி இது குறித்து அமைதியாக இருக்கிறார்.” என்று தெரிவித்துள்ளார்.

## தமிழக மீனவர்களின் இன்னல்களை களைய கச்சத்தீவை மீட்பதுதான் நிரந்தர தீர்வு: முதல்வர் ஸ்டாலின்

சென்னை: மே.30-

‘‘தமிழக மீனவர்களின் இன்னல்கள் எல்லாம் தீர கச்சத்தீவை மீட்பதுதான் ஒரே வழி’’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னை, திருவொற்றியூரில், மீன்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.272.70 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவொற்றியூர் புதிய சூரை மீன்பிடி துறைமுகம் உட்பட ரூ. 426 .13 கோடியில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணை என 13 முடிவுற்ற திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும், ராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடம் மற்றும் ரோச்மா நகர் மீனவ கிராமங்களில் ரூ. 170 கோடி மதிப்பில் மீன் இறங்குதளங்களை மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இதுதவிர, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மகளிர் கூட்டுக் குழுக்களுக்கு நுண்கடன் வழங்கும் அலைகள் திட்டத்தை தொடங்கி வைத்து, 2,290 மீனவ பயனாளிகளுக்கு ரூ.10 .67 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:




சென்னையின் வளர்ச்சியில் பழவேற்காட்டிலிருந்து கோவளம் வரைக்கும் மீனவ கிராமங்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. மீனவர்களின் நலன், வாழ்வாதாரத்தை பாதுகாப்பது தமிழ்ச்சமுதாயத்தின் பண்பாட்டை காப்பதற்கு சமம். அதை திமுக அரசு செய்து வருகிறது.

மீனவர்கள் நலன் காப்பதுடன், பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலை நாட்ட தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அதனால்தான், ஏப்2ம் தேதி கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற தனித்தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். கச்சத்தீவை மீட்பதுதான் தமிழக மீனவர்களின் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வாக அமையும்.

கடந்த 4 ஆண்டுகளில் 97 நிகழ்வுகளில், 185 படகுகளும், 1,383 மீனவர்களும், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் பிரதமர், மத்திய வெளியுறவு அமைச்சருக்கும் இதுவரை 76 கடிதங்களை எழுதியுள்ளேன்.நேரில் சந்திக்கும் போதும் வலியுறுத்தி வருகிறேன்.

திமுக உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புகின்றனர். இதனால் தான், 1,354 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 29 பேரயும் மீட்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த நிலையிலும், 2018ஆம் ஆண்டு முதல் சிறைபிடித்த 229 படகுகளை இலங்கை அரசு இதுவரைக்கும் விடுவிக்கவில்லை.

ஒருபுறம், அவற்றை மீட்க அரசியல் போராட்டம் நடத்தினாலும், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது எவ மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை சேர்ந்த 129 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 லட்சம் , 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 லட்சம் வீதமும் வழங்கியுள்ளோம். இந்த தொகையை தற்போது ரூ.8 லட்சமாக உயர்த்தியுள்ளேன்.

இப்படி, மீனவர்கள் கண்ணீரைத் துடைக்கும் அரசாக திமுக அரசு உள்ளது. இந்த இன்னல்கள் எல்லாம் தீர கச்சத்தீவை மீட்பதுதான் ஒரே வழி. கடந்த 4 ஆண்டுகளில் மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவித்தொகை ரூ.518.53 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்காக கட்டப்பட்ட 8 ,561 வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

1.20 லட்சம் மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.1,528 கோடிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. தங்கச்சிமடம், குந்துகால், பாம்பன் ஆகிய இடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.356.50 கோடி நிதி ஒதுக்கி, பணிகள் தொடங்கப்பட உள்ளது.

மீனவர்கள் துயரங்களை எதிர்கொள்ளும் தருணங்களில் நிவாரண உதவிகளை வழங்குவதில் முனைப்போடு திமுக அரசு செயல்பட்டு வருகிறது. மீனவர்களின் நலனுக்காக தமிழகம் அளவுக்கு எந்த மாநிலமும் இதுவரை இப்படிப்பட்ட காரியங்களை செய்ததில்லை. மீனவர்களின் நலனுக்காக இன்னும் செய்ய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம். அரசின் திட்டங்களை மீனவ மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், சேகர்பாபு மற்றும் கலாநிதி வீராசாமி எம்பி., கே.பி.சங்கர்,எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, துரை சந்திரசேகர் உள்ளிட்ட எம்எல்ஏக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மதுரை மாநகராட்சி மேயரின் கணவர் திமுகவில் இருந்து நீக்கம்: பின்னணி என்ன?

மதுரை: மே.30-

மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணியின் கணவர் பொன் வசந்த், திமுகவில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். ஜூன் 1ம் தேதி கட்சிப் பொதுக்குழுவில் பங்கேற்க வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்பதற்காக அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள் ஏற்பாடு செய்த கட்சி ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்காமல், அதற்கு போட்டியாக அதிமுக கவுன்சிலர்கள் துணையுடன் மாநகராட்சி கூட்டத்தை நடத்தியதற்கு மூளையாக செயல்பட்டதால் அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஆரம்பம் முதலே மோதல்.. மதுரை மாநகராட்சி திமுக மேயராக இந்திராணி இருந்து வருகிறார். இவர் அமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜனின் தீவிர ஆதரவாளராக செயல்பட்டு வந்தார். இந்திராணி மேயரான நாள் முதல், தற்போது வரை இவருக்கும் பெரும்பான்மை திமுக கவுன்சிலர்கள், மண்டலத் தலைவர்களுக்கும் ஒத்துப்போகவில்லை. ஒரே ஒரு மத்திய மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி மட்டும் மேயர் இந்திராணி ஆதரவாளராக இருந்து வருகிறார்.

மேயர் இந்திராணி பெயரளவுக்கு மேயராகவும், நிழல் மேயராக அவரது கணவர் பொன் வசந்த் செயல்பட்டு வருவதாகவும், மாநகராட்சி நிர்வாகப் பணிகளில் தலை யிடுவதோடு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதாகவும் குற்றச்சாட்டு இருந்து வந்தது.

5 ஆணையாளர்கள் மாற்றம்.. மேயர் இந்திராணி, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விசுவாசியாக இருந்து வந்ததால், மாநகராட்சி அதிகாரிகளும், மேயரையும், அவரது கணவரையும் அனுசரித்து செல்லாவிட்டால் அமைச்சரை பகைக்க வேண்டியது இருக்கும் என்று நினைத்தனர்.

அதனால், மாநகராட்சி ஆணையாளர்களாக வந்தவர்கள் சிறிது காலம் கூட தாக்குப்பிடிக்க முடியாமல் சென்றனர். இவர்களில் சிலர், மேயர் தரப்பினர் நெருக்கடியாலும், சிலர் இவர்களது நடவடிக்கை பிடிக்காமலும் சென்றனர். அதனால், மேயர் இந்திராணி மேயராகி 4 ஆண்டுகள் நெருங்கும் நிலையில் 5 ஆணையாளர்கள் மாற்றப்பட்ட நிலையில் தற்போது 6வது ஆணையாளராக சித்ரா வந்துள்ளார்.

‘அடுத்தது மேயர்?’ இந்நிலையில் திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன், மேயர் இந்திராணி கணவர் பொன்வசந்தை, கட்சி கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வந்ததாலும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுவதாக அறி வித்துள்ளார்.

அடுத்தக்கட்டமாக மேயர் இந்திராணி மீதும் நடவடிக்கை பாய இருப்பதாகவும் கூறப்படுவதால் அவரது பதவிக்கும் ஆபத்து நெருங்கி யிருப்பதாக, மதுரை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நடவடிக்கையின் பின்னணி: இதுகுறித்து திமுக மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: பொன் வசந்த், முன்னாள் சபாநாயகர் பிடிஆர். பழனிவேல் ராஜனின் தீவிர விசுவாசி. அவரது மறைவுக்கு பிறகு அவரது மகன் பிடி.ஆர். பழனிவேல் தியாகராஜனின் ஆதரவாளராக இருந்து வந்தார். திமுக ஆட்சி அமைந்தபோது பழனிவேல் தியாகராஜன், நிதி




அமைச்சராகவும், மாநில திமுக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளராகவும் கட்சி, ஆட்சி இரண்டிலுமே செல்வாக்குடன் இருந்து வந்தார்.

அவர் ‘கை’ காட்டும் நபர் மதுரை மேயராக வரக்கூடிய நிலை இருந்ததால், அவர் தனது ஆதரவாளர் பொன் வசந்த் மனைவி இந்திராணியை மேயராக்கினார். அதற்கு முன்பு வரை, இந்திராணிக்கு அரசியல் அனுபவமே இல்லை. அரசியலிலும் அவர் ஈடுபடவில்லை. அவர் வெற்றி பெற்ற 57 வது வார்டு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதால் பொன் வசந்த் போட்டியிடாமல் தனது மனைவி இந்திராணியை போட்டியிட வைத்தார்.

மேயராக அவர் பொறுப்பேற்ற போது, இந்தக் கேள்வியை அமைச்சர் பழனிவேல் தியாகராஜனிடம் செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு பழனிவேல் தியாகராஜன், ஐஏஎஸ் அதிகாரிகள் அவருக்கு வழிகாட்டுவார்கள், போகப்போக எல்லாம் சரியாகிவிடும் என்று நம்பிக்கை அளித்தார். அவரது ஆலோசனையில் மேயர் இந்திராணி செயல்பட்டு வந்தார்.

ஒதுங்கிய அமைச்சர்; ஓங்கிய மேயரின் கணவர்.. இதற்கிடையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பழனிவேல் தியாகராஜன், திடீரென்று நிதி அமைச்சர் பொறுப்பில் இருந்து தகவல் தொழில்நுட்ப அமைச்சராக மாற்றப்பட்டார். மாநகர மாவட்டச் செயலாளர் பொறுப்புக்கு தனது ஆதரவாளர் வதலை செந்திலை கொண்டு வரமுடியவில்லை என்ற ஆதங்கத்தில் கட்சி பொறுப்பில் இருந்தும் பழனிவேல் தியாகராஜன், தன்னை விடுவித்துக் கொண்டார். அதன்பிறகு பழனிவேல் தியாகராஜன், மாநகராட்சி விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டார்.

இந்த வசதியைப் பயன்படுத்தி மேயர் இந்திராணி கணவர் பொன்வசந்த், பணிகளை டெண்டர் விடுவது, வார்டுகளுக்கு பணி ஒதுக்குவது, மாநகராட்சி அதிகாரிகள், பணியாளர்களை அன்றாடம் இயக்குவது வரை அனைத்து விவகாரங்களிலும் முழுமையாக தலையிட ஆரம்பித்தார்.

இது, மாநகராட்சி ஆணையாளராக வந்தவர்களுக்கும், இவருக்கும் மோதல் போக்கை ஏற்படுத்தியது. அதனால், சில ஆணையாளர்கள் இவரது நெருக்கடியால் மாற்றப்பட்டதும், பலர் இவரது நடவடிக்கை பிடிக்காமல் இடமாறுதல் வாங்கியும் சென்றதும் நடந்ததால் மாநகராட்சி நிர்வாகப் பணிகள் ஸ்தம்பித்தன.

ஸ்மார்ட் சிட்டி பணிகள், பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டம், பாதாளச் சாக்கடைப் பணிகள் தற்போது வரை நிறைவு பெறாமல் இருப்பது போன்றவை மாநகராட்சி ஆணையாளர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்பட்டதுதான் முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

புறக்கணித்த அமைச்சர்.. சமீப காலமாக மேயர் இந்திராணி, அவரது கணவர் பொன் வசந்த் நடவடிக்கைகள் முற்றிலும் பிடிக்காமல் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், அவர்களை தன்னை பார்க்க அனுமதிப்பதில்லை என்று கூறப்படுகிறது. இது ஒரு புறமும் தனது ஆதரவு அமைச்சர் கைவிட்ட நிலையில் மற்றொரு புறம் திமுக கவுன்சிலர்கள், மண்டலத் தலைவர்கள் எதிர்ப்பையும் மேயர் இந்திராணியால் சமாளிக்க முடியவில்லை. மாநகராட்சி கூட்டங்களில் திமுக கவுன்சிலர்களே நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தனர்.

அதிமுக, சிபிஎம், தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் போன்ற பிற கட்சி கவுன்சிலர்களுடன், இந்த எதிர்ப்பை, மேயர் இந்திராணி அவரது கணவர் பொன்வசந்த் பின்னணியில் சமாளித்து வந்தார். ஆனாலும், நிழல் மேயர் போல் மாநகராட்சி நிர்வாகத்தில் தலையிடுவதை அவர் நிறுத்தவில்லை.

இன்னும் அவரது தலையீடு அதிகமானதால், இது தொடர்பாக அடிக்கடி கட்சித் தலைமைக்கு, உள்ளூர் திமுகவினர் புகார்களை தட்டிவிட்டு வந்தனர்.

குழப்பத்தை ஏற்படுத்திய பொன் வசந்த்: இந்தச் சூழலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வரும் ஜூன் 1ம் தேதி மதுரை உத்தங்குடியில் நடக்கும் பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க வருகிறார். இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் திமுகவினர் செய்து வருகிறார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும், முதல்வர் ஸ்டாலினை வரவேற்பதற்கான ஆலோசனைக் கூட்டம், அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், மாநகரச் செயலாளர் தளபதி, புறநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் மணிமாறன் ஆகியோர் தலைமையில் கடந்த 23ம் தேதி காலை வெள்ளிக்கிழமை நடந்தது.

இதே நாளில், இதே நேரத்தில் மாநகராட்சி கூட்டத்திற்கு மேயர் இந்திராணி ஏற்பாடு செய்திருந்தார். அதனால், பொறுப்புகளில் உள்ள திமுக கவுன்சிலர்கள், மற்ற திமுக கவுன்சிலர்கள், இரு கூட்டங்களில் எந்த கூட்டத்திற்கு செல்வது என்பதில் தடுமாறினர்.

திமுக நிர்வாகிகளும், கவுன்சிலர்கள் சிலரும், மேயர் இந்திராணி கணவர் பொன்வசந்தை தொடர்பு கொண்டு, மாநகராட்சி கூட்டத்தை தள்ளி வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர், கட்சி ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்பே மாநகராட்சி நிர்வாகம் நிர்ணயிக்கப்பட்டதாகவும், வேண்டுமென்றால் அவர்கள் கூட்டத்தை தள்ளி வைக்கட்டும் என்று கூறியுள்ளார். அதனால், திமுக கவுன்சிலர்கள், பெரும்பாலானவர்கள், கட்சி கூட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, மாநகராட்சி கூட்டத்திற்கு வரவில்லை. வெறும் 22 கவுன்சிலர்கள் மட்டுமே பங்கேற்ற நிலையில், மாநகராட்சி கூட்டம் ரத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மேயர் இந்திராணி, அதிமுக, சிபிஎம், தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் கவுன்சிலர்கள் துணையுடன் கூட்டத்தை நடத்தினார். தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு கோரம் இல்லாத நிலையில், மேயர் இந்திராணி கணவர் பொன்வசந்த், வெளியில் இருந்து கொண்டே திமுக கவுன்சிலர்களை அழைத்துள்ளார். அவர்களில் ஒரு சிலர் திமுக கூட்டத்தில் இருந்து மாநகராட்சி கூட்டத்திற்கு வந்ததால் அதிமுக மற்றும் தங்கள் கூட்டணி கட்சி கவுன்சிலர்களுடன் தீர்மானத்தையும் நிறைவேற்றி வெற்றிகரமாக கூட்டத்தை நடத்தி விட்டனர்.

அதிருப்தியடைந்த அமைச்சர்கள்: இது, அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. முதல்வரை வரவேற்க நடத்திய ஆலோசனைக் கூட்டத்தை புறக்கணித்ததோடு, கட்சி கூட்டத்துக்குப் போட்டியாக அதிமுக கவுன்சிலர்கள் துணையுடன் மாநகராட்சி கூட்டத்தை நடத்தியது தொடர்பாக மாநகர, புறநகர் கட்சிகளில் இருந்து கட்சித் தலைமைக்கு புகார்கள் சென்றன. மேலும், மாநகராட்சிப் பணிகளில் அதிகாரிகளையும், பணியாளர்களையும் கண்ணியக் குறைவாக பேசுவதாகவும் புகார்கள் சென்றன.

அதனால், முதற்கட்ட நடவடிக்கையாகவே தற்போது மேயர் கணவர் பொன்வசந்த் மீது மட்டும் நடவடிக்கை எடுத்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அடுத்தக்கட்டமாக மேயர் இந்திராணி மீதும் நடவடிக்கை பாயலாம். இதற்கிடையில் மேயருக்கு எதிராக கவுன்சிலர்கள் அடுத்தக் கூட்டத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆலோசனை செய்கின்றனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து மேயர் கணவர் பொன்வசந்த் கருத்தை அறிய அவரை தொடர்பு கொண்டபோது அவர் அழைப்பை ஏற்கவில்லை.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 2023ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி முதல்

# கட்டிட வரைபட அனுமதி நேரடியாக பெற்றிருந்தால், அவை செல்லாது அவற்றை முறைப்படுத்தாவிடில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, மே.30-

சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில், 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி முதல் கட்டிட வரைபட அனுமதி நேரடியாக பெற்றிருந்தால், அவை செல்லாது என்றும், அவற்றை முறைப்படுத்தாவிடில் குடிநீர் மற்றும் மின்சாரம் விநியோகம் துண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிவகங்கை மாவட்டம், அனைத்து ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளிலும், கடந்த 01.10.2023 முதல் மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டிட வரைபட அனுமதி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் இணையதளம் மூலம் மட்டுமே பெறப்பட வேண்டும் எனவும், நேரடியாக பெற்ற அனுமதி செல்லாது என வெளியான அரசாணை நடைமுறையில் உள்ளது.

அதன்படி, கடந்த 01.10.2023 முதல் உள்ளாட்சி அமைப்புகளில் கட்டப்பட்டுள்ள வீடுகள் இந்நடை முறையை பின்பற்றிருத்தல் வேண்டும். நேரடி அனுமதி பெற்றிரு ந்தால், அவற்றை முறைப்படுத்திக் கொள்ளலாம். மேலும், 2,500 முதல் 3,500 சதுர அடி வரை கட்டிட பரப்பில் தரை மற்றும் முதல் தளம் கொண்ட குடியிருப்புகள் கட்டுவதற்கான ஒற்றைச் சாளர முறையில் சுயசான்றின் அடிப்படையில், உடனடி அனுமதி வழங்கும் நடைமுறை அமலில் உள்ளது.

மேலும், குடியிருப்பு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் மற்றும் நடைமுறையை எளிமைப்படுத்துதல், தாமதங்களை தவிர்த்தல், கட்டணம் செலுத்துவதை எளிமையாக்குதல், இடைத்தரகர்களை தவிர்த்தல் ஆகியவைகளை தவிர்த்து, மக்கள் நேரடியாக விண்ணப்பித்து சுய சான்று கட்டிட அனுமதி பெற, பதிவு செய்யப்பட்ட கட்டிட வல்லுநர் கையொப்பமிட்ட விண்ணப்பதாரர் பெயரில் பதிவான திட்ட வரைபடம் பத்திரம், பட்டா, அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ஆவணம், தள புகைப்படம் ஆகியவைகளை கொண்டு விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறாக, உரிய அனுமதி பெறப்படாத வீடுகள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு வீட்டு வரி, சொத்து வரி ஆகியவை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட மாட்டாது. குடிநீர் இணைப்பு இருந்தால் துண்டிக்கப்படும். புதிய குடிநீர் இணைப்பும் வழங்கப்பட மாட்டாது. மின் இணைப்பையும் துண்டிக்க மின் வாரியத்திற்கு பரிந்துரைக்கப்படும். அனுமதிக்கப்படாத கட்டிடங்கள் ஊராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியாமல் இயங்கினால், அவற்றை அகற்ற அரசு விதிமுறைகளின்படி நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

எனவே, பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் www.onlineppa.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே, கட்டிட வரைபட அனுமதி பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாவட்டத்தில் பழங்காநத்தம், டி.வி.எஸ்.நகர் மற்றும் ஜெய்ஹிந்துபுரம் பகுதிகளை இணைக்கும் வகையில் இரயில்வே மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சி மூலம் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்கள் அதனை தொடர்ந்து மதுரையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் ஆகியோர் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ. சங்கீதா. இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் இ.ஆ.ப., அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள், ஆகியோர் உடன் உள்ளனர்.

# மானாமதுரை அருகே மதுரை இராமேஸ்வரம் நெடுஞ்சாலையில் இரவு நேரத்தில் இருளில் சிக்கி தவிக்கும் கிராமம்

மானாமதுரை, மே.30-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மதுரை இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் மேலப்பசலை கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் அருகே வன்னிக்குடி வி.கரிசல் குளம், சோமத்தூர், சின்னக்க ண்ணூர் புலிக் குளம் ,மானகாத்தான் போன்ற கிராமத்தில் பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.கிராமங் கள் அனைத்தும் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்திருந்தலும் இவர்களுக்கு விநியோகம் செய்யப்படும் மின்சாரம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வழங்கப்படுகிறது மேலப்பசலை கிராமம் அருகே மானாமதுரை விருதுநகர் இரயில்வே பாதை அமைந்துள்ளதால் மின்சாரம் வேறு மாவட்டத்தில் இருந்து கிடைக்கின்றது. நான்கு வழிச்சாலையில் விரிவாக்கம் செய்யப்பட்ட போது ஏற்படுத்திய ஹைமாஸ் விளக்குகள் சிறிது காலத்திலேயே பழுதுடைந்தது அதன் பின் பழுதை சீர் செய்யாததால் மேலப்பசலை கிராம இரவு நேரத்தில் இருளில் மூழ்கியாதல் பொதுமக்கள் சிக்கி தவிக்கின்றனர். ஒரு சில நேரங்களில் தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் போது விபத்தில் சிக்குகின்றனர்.மேலும் மின் இணைப்புகள் கூடியுள்ள நிலையில் அதற்கேற்ப போதிய வசதிகள் செய்து தரப்படவில்லை. இதனால் அதிக மின்னழுத்தம், குறைந்த மின்னழுத்தம் காரணமாக அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. கடந்த இருநாட்களாக மின்சாரம் இன்றி இருளில் கிராமமக்கள் தவித்து வருகின்றனர். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மாலை நேரத்தில் போதிய வெளிச்சமின்றி படிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். குடிநீர் மோட்டார்கள் இயக்க கூட மின்சாரம் இன்றி மேலப்பசலை கிராம மக்கள் தவிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.



அப்பகுதியை சேர்ந்த ஜெய்சங்கர் என்ற ஆட்டோ ஓட்டுனர் கூறுகையில்

மதுரை இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் எங்கள் பகுதிக்கு பேருந்து நிறுத்தம் அமைந்துள்ளது இரவு நேரத்தில் போதிய வெளிச்சம் இல்லாமல் எதிரில் வரும் வாகன வெளிச்சத்தில் தான் கடந்த செல்லும் சூழ்நிலை உள்ளது இதனால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளம் சாலையின் இருபுறமும் இருளாக இருப்பதால் பெண்கள் அச்சத்துடன் கடக்க வேண்டும் அதனை தவிர்க்கும் வகையில் மின்சார பழுது ஏற்படாத வகையில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க வேண்டும் மற்றும் சீரான மின் விநியோகம் வேண்டும் என்று பொதுமக்கள் சார்பில் கோரிக்கை எழுந்துள்ளது மேலும் மின் திட்டங்கள் அமைத்து கிராமங்களுக்கு ஒளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.




■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக சேலம் மாநகராட்சியின் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ள சேலம், அல்லிக்குட்டை ஏரியினைத் திறந்து வைத்ததைத்தொடர்ந்து, சேலம், அல்லிக்குட்டையில் ஏரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் மாநகராட்சி மேயர் திரு. ஆ. இராமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். உடன். மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



# கரூர் மாரியம்மன் கோயிலில் கம்பம் ஆற்றில் விடும் விழா கோலாகலம்

கரூர், மே.30-

கரூர், மாரியம்மன் கோயிலில் கம்பம் ஆற்றில் விடும் விழா கோலாகலமாக நேற்று நடந்தது. கரூரில் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் வைகாசி திருவிழா விமரிசையாக நடந்து வருகிறது. இந்தாண்டு விழா கடந்த 11ம் தேதி கம்பம் நடுதலுடன் துவங்கியது. 16ல் பூச்சொரிதல் விழா, 18ல் காப்பு கட்டுதல் நடந்தது. கடந்த மூன்று நாட்களாக காலை 7 மணி முதல் இரவு வரை தேரோட்டம், அக்னி சட்டி எடுத்தல், அலகு குத்தி வருதல், கரும்பு தொட்டிலில் குழந்தையை எடுத்து வருதல், மாவிளக்கு ஊர்வலம் என பக்தர்கள் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர்.

முக்கிய நிகழ்வான கம்பம் ஆற்றுக்கு அனுப்புதல் விழா நேற்று மாலை 5.15 மணிக்கு நடந்தது. கோயிலில் இருந்து பூசாரி கம்பத்தை எடுத்து வந்து, அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் நிறுத்தினார். பின்னர் பக்தர்களுடன் ஊர்வலமாக கொண்டு, பசுபதிபாளையம் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள மணல் திட்டில், கம்பம் நடப்பட்டு அதன் மீது மஞ்சள், குங்குமம் துாவி பூஜை செய்து தீபாராதனை காட்டப்பட்டது. அங்கு வெட்டி வைக்கப்பட்டிருந்த அகழியில் உள்ள புனித நீரில், கம்பத்தை விட்டு மூழ்கடித்தனர். பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. அமராவதி ஆற்றில் இரவு வாண வேடிக்கை நடந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வாண வேடிக்கையை கண்டு களித்தனர்.

இன்று புஷ்ப வாகனம், நாளை கருட வாகனம், 31ல் மயில் வாகனம், 1ல் கிளி வாகனம், 2ல் வேப்பமர வாகனம், 3ல் பின்னமர வாகனத்தில் அம்மன் அருள் பாலிக்கிறார். 8ம் தேதி அம்மன் குடி புகுதல் நிகழ்ச்சியுடன் திருவிழா நிறைவடைகிறது.



# கோயம்பேடு பழ மார்க்கெட்டில் ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்: அங்காடி நிர்வாக அலுவலர் நடவடிக்கை

அண்ணாநகர், மே.30-

கோயம்பேடு பழ மார்க்கெட்டில் ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றினர். சென்னை கோயம்பேடு காய்கறி, பூக்கள், பழம் மார்க்கெட்டுகளில் பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையை ஆக்கிரமித்து வியாபாரம் செய்துவருவதால் நடக்கக்கூட வழியின்றி தவித்தனர். இதுசம்பந்தமாக அடிக்கடி அங்காடி நிர்வாக அலுவலகத்துக்கு புகார்கள் சென்றன. இந்த நிலையில், அங்காடி நிர்வாக முதன்மை அலுவலர் இந்துமதி ஆய்வு செய்தார். பின்னர் அவர், ''பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையை ஆக்கிரமித்து இடையூறாக இருந்த ஆக்கிரமிப்பு கடைகளை உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும்' என்று உத்தரவிட்டார். இதன் அடிப்படையில், ஆக்கிரமிப்பு கடைகளை அங்காடி நிர்வாக ஊழியர்கள் அகற்றியதுடன் அபராதம் விதித்து வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுவித்தனர். இதன்பிறகு மக்கள் எளிதாக சென்றுவந்தனர்.

இந்தநிலையில், கோயம்பேடு பழம் மார்க்கெட்டில் பொதுமக்கள் நடந்துச்செல்லும் பாதையை ஆக்கிரமித்து மீண்டும் வியாபாரம் செய்து வந்தனர். இதையடுத்து நேற்று பழ மார்க்கெட்டில் அங்காடி நிர்வாக முதன்மை அலுவலர் இந்துமதி ஆய்வு செய்து பொதுமக்கள் நடந்துச்செல்லும் பாதை ஆக்கிரமிப்பை அகற்றியதுடன் கடைகளுக்கு 30ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. ''அதிகாரிகளின் எச்சரிக்கையை மீறி மீண்டும் கடைகள் அமைத்து வியாபாரம் செய்வது தெரியவந்தால் கடும் நடவடிக்கை எடுப்படும்'' என்று அங்காடி நிர்வாகம் எச்சரித்துள்ளது.

ஜெயந்தி ரோகு மற்றும் ரோகு மீன் விரலிகளை வாங்க விரும்பும் மீன் வளர்ப்போர்,

# உள்நாட்டு மீனவர்கள் மற்றும் கண்மாய்களில் மீன் பாசி குத்தகை எடுப்போர், பிரவலூர் அரசு மீன் விதை வளர்ப்பு பண்ணையினை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, மே.30-

சிவகங்கை மாவட்டம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள பிரவலூர் அரசு மீன்விதை வளர்ப்பு பண்ணையில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது ஜெயந்தி ரோகு மற்றும் ரோகு மீன்விரலிகள் கையிருப்பில் உள்ளன. எனவே, மாவட்டத்தில் உள்ள மீன் வளர்ப்போர் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் கண்மாய்களில் மீன்பாசி குத்தகை எடுப்போர் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் மீன்விரலிகளை வாங்கி பயன்பெறலாம்.

எனவே, மீன் விரலிகளை வாங்க விரும்பும் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் பிரவலூர் அரசு மீன் விதை வளர்ப்பு பண்ணை,கீழப்பூங்குடி ரோடு, ஒக்கூர் சிவகங்கை 630561 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04575 240848 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது மீன்வள ஆய்வாளர் அவர்களை 9384824553 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.




■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் மாநில அளவிலான கேரம் போட்டியில் வெற்றி பெற்ற மாணவனை வாழ்த்தி பாராட்டுக்களைத் தெரிவித்தார்

# கோடை விடுமுறை முடிந்து மக்கள் ஊர் திரும்பும் நிலையில் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல்: பயணிகள் குற்றச்சாட்டு

**சென்னை, மே.30–**



கோடை விடுமுறை முடிந்து சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்பத் தொடங்கியுள்ள நிலையில், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கோடை விடுமுறை முடிந்து, தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகள் ஜூன் 2ம் தேதியும், தனியார் பள்ளிகள் ஜூன் 5ம் தேதியும் திறக்கப்பட உள்ளன. இதையொட்டி, விடுமுறைக்காக சொந்த ஊர் சென்றவர்கள் நாளை (மே 30) ஊர் திரும்ப திட்டமிட்டு வருகின்றனர்.

ரயில்களில் முன்பதிவு ஏற்கெனவே நிறைவடைந்த நிலையில் பெரும்பாலானோர் தத்கால் மூலம் பயணச் சீட்டு பெற முயற்சிக்கும் முடிவில் இருக்கின்றனர். மேலும் சிலர் தனியார் பேருந்துகளையும் நாடுகின்றனர். இந்த நிலையில், கோடை விடுமுறை முடிந்து ஏராளமானோர் ஊர் திரும்பும் சூழலை பயன்படுத்தி, வழக்கம்போல ஆம்னி பேருந்துகளில் கட்டணத்தை உயர்த்தி வசூலிப்பதாக பயணிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக பயணிகள் சிலர் கூறியதாவது: திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவிலில் இருந்து சென்னைக்கு அரசு பேருந்துகளில் சென்றால், சுமார் 16 மணி நேரம் வரை பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால், பயண நேரத்தை குறைக்கவே பெரும்பாலும் ஆம்னி பேருந்துகளை நாடுகிறோம். தற்போது அதிகபட்சமாக ரூ.3,600 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பண்டிகை நாட்கள், தொடர் விடுமுறை நாட்கள் வரும்போதெல்லாம் இந்த பிரச்சினை வருகிறது. எனவே, அரசு விரைந்து தீர்வு காண வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் கூறும்போது, ''ஆம்னி பேருந்துகள் ஒப்பந்த வகையிலான வாகனம் என்பதால் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. அதிகபட்ச கட்டணம் உரிமையாளர்கள் சார்பில் நிர்ணயிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுடன் இணையதளத்தில் பதிவேற்றியுள்ளோம். அதற்கு அதிகமாக கட்டணம் வசூலிக் கப்படுவது இல்லை'' என்றனர்.

இது குறித்து போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறியபோது, ''ஆம்னி பேருந்துகள் இயக்கத்தை தொடர்ந்து கண்காணித்து எச்சரிக்கை விடுத்து வருகிறோம். பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 18004256151, 04424749002, 26280445, 26281611 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம். கோடை விடுமுறை முடிந்து ஊர் திரும்புவோர் வசதிக்காக 800க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அரசு சொகுசு பேருந்துகளின் இருக்கைகள் முன்பதிவு நிறைவடையவில்லை. பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்றனர்.



# பலாப்பழத்தை ருசிக்க குடியிருப்பு பகுதியில் ஒற்றை யானை முகாம்: மக்கள் அச்சம்

குன்னூர், மே.30-

குன்னூர் அருகே பலாப்பழத்தை ருசிக்க குடியிருப்பு பகுதியில் காட்டு யானை முகாமிட்டுள்ளதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். நீலகிரி மாவட்டம் குன்னூரில் பலாப்பழம் சீசன் துவங்கி உள்ளது. குறிப்பாக குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் உள்ள தனியார் தோட்டங்களிலும், அரசு தோட்டக்கலை பண்னை தோட்டங்களிலும் வைக்கப்பட்டுள்ள பலா மரங்களில் பலாப்பழம் காய்த்துள்ளன. இதனை ருசிப்பதற்காக வனப்பகுதிகளிலிருந்து காட்டு யானைகள் குன்னூரை நோக்கி படையெடுத்து வருகின்றன. மேலும் சுமார் 10க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் தனிதனி குழுக்களாக பிரிந்து மலைப்பாதையில் முகாமிட்டுள்ளன. இந்நிலையில், கே.என்.ஆர் குடியிருப்பு பகுதி மரத்தில் உள்ள பலாப்பழங்களை ருசிக்க ஒற்றை காட்டு யானை முகாமிட்டுள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்த குன்னூர் வனசரகர் ரவீந்திரநாத் தலைமையிலான வனத்துறையினர் காட்டுயானையை சாலைக்கு வராமல், அந்த குடியிருப்பு பகுதியில் இருந்து விரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் கவனமுடன் வாகனங்களை இயக்க வேண்டும் எனவும், காட்டு யானையை புகைப்படம் எடுத்து தொந்தரவு செய்ய வேண்டாம் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையோரத்தில் உள்ள கடைகளில் பலா பழங்களை விற்பனை செய்யக்கூடாது என வியாபாரிகளுக்கு வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# தஞ்சை சர்க்கஸ் கூடாரத்தில் திருட்டு போன ஒட்டகம் மீட்பு: பராமரிக்க முடியாமல் விட்டுச்சென்ற திருடன்

தஞ்சை, மே.30-

தஞ்சை சர்க்கஸ் கூடாரத்தில் இருந்து திருட்டுப்போன ஒட்டகத்தை போலீசார் மீட்டனர். கரூர் மாவட்டம் குந்திரமணிப்பாளையம் நத்தமேடு பகுதியை சேர்ந்தவர் விஜய்(25). இவர் தனது குடும்பத்தினருடன் ஊர் ஊராக சென்று கூடாரம் அமைத்து சர்க்கஸ் நடத்தி வருகிறார். இதற்காக நாய்கள், ஆடு, குதிரை, ஒட்டகம் வளர்த்து வருகிறார். தஞ்சை கீழ வஸ்தா சாவடியில் கூடாரம் அமைத்து சர்க்கஸ் நடத்தி வந்தார். கடந்த 15ம் தேதி இரவு கூடாரத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஒட்டகத்தை காணவில்லை. இதுகுறித்து விஜய் அளித்த புகாரின்பேரில் தஞ்சை தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து ஒட்டகத்தை திருடி சென்ற மர்ம நபர்களை தேடி வந்தனர்.

இந்நிலையில் தஞ்சை அருகே ரெட்டிப்பாளையம் ஆற்றங்கரையில் ஒரு மரத்தில் ஒட்டகம் கட்டப்பட்டு இருப்பதாக போலீசாருக்கு கடந்த தகவல் கிடைத்தது. உடன் போலீசார் அங்கு சென்று ஒட்டகத்தை மீட்டு வந்தனர். ஒட்டகத்தை திருடிச் சென்றவர் அதனை பராமரிக்க முடியாமல் ரெட்டிப்பாளையம் பகுதியில் விட்டுச் சென்றது தெரிய வந்தது. இதையடுத்து ஒட்டகத்தை போலீசார் அதன் உரிமையாளரிடம் நேற்று ஒப்படைத்தனர்.

# அரசு பள்ளியில் பயில்வதால் கிடைக்கும் பலன்கள் பட்டியல்: பேனர் வைத்து அழைப்பு

நெல்லை, மே.30-

அரசுப்பள்ளியில் பயில்வதால் கிடைக்கும் பலன்கள் குறித்து அரசு பள்ளி சார்பில் பட்டியலிட்டு பேனர் வைத்துள்ளனர். இது பொதுமக்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ளது. கடந்த 4 ஆண்டுகளாக அரசு பள்ளி மாணவர்களுக்கு நான் முதல்வன் உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் அரசுப்பள்ளிகளில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இந்த நிலையில் 202526ம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஒன்று, 6, மற்றும் 9, 11ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர ஆர்வம் காட்டுகின்றனர்.

நெல்லை டவுன் ஆர்ச் அருகே உள்ள அரசுப் பள்ளியில் மாணவர் சேர்க்கை நடைபெறும் நிலையில் அரசுப்பள்ளியில் சேர்ந்து பயில்வதால் கிடைக்கும் பலன்கள் குறித்து விவர பட்டியலை பள்ளி முன்




பொதுமக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர். அதில் இடம் பெற்றுள்ள தகவல்கள்: விலையில்லா நலத்திட்டங்களாக இலவச சீருடை, புத்தகங்கள், நோட்டுகள், புத்தகப்பை, காலணிகள், சாக்ஸ், அட்லஸ், கணித உபகரண பெட்டி, மதிய உணவு, மிதி வண்டி மற்றும் பிற திட்டங்களாக 7.5 சதவீத இட ஒதுக்கீடு, புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்கள் உள்ளன.

காற்றோட்டமான வகுப்பறைகள், அனுபவமிக்க ஆசிரியர்கள், பஸ் வசதி, உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம், ஸ்மார்ட் வகுப்பறை, அறிவியல் மன்றம், இலக்கிய மன்றம், வானவில் மன்றம், தமிழ் கூடல், உயர் கல்வி வழிகாட்டல், திறனாய்வு தேர்வு பயிற்சி, உலக திரைப்படம் திரையிடல், மருத்துவ பரிசோதனை போன்ற வசதிகளும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்களிடம் அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

# நீலகிரியில் தொடரும் கனமழை: பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் பாதுகாப்புடன் இருக்க அறிவுறுத்தல்

ஊட்டி, மே.30-

நீலகிரி மாவட்டத்தில் இரண்டு நாட்கள் கனமழை பெய்யும் என்பதால் பொதுமக்கள் யாரும் தேவையின்றி வெளியில் வர வேண்டாம். சுற்றுலா பயணிகள் பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

கேரளாவில் ஆண்டு தோறும் ஜூன் முதல் வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும். அதன் தொடர்ச்சியாக, நீலகிரி மாவட்டத்திலும் தென்மேற்கு பருவமழை தீவிரமடையும். நடப்பு ஆண்டு கேரளாவில் 8 நாள் முன்னதாக கடந்த 24ம் தேதி முதல் தென்மேற்கு பருவமழை தொடங்கியது.

இதன் தாக்கத்தால் நீலகிரி, கோவை உட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள தமிழக மாவட்டங்களில் மழை தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் 24ம் தேதி நள்ளிரவு முதல் பரவலாக காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. கடந்த 6 நாட்களாக கனமழை கொட்டி வருகிறது.

ஊட்டி, குந்தா, கூடலூர், பந்தலூர் பகுதிகளில் மழையின் தாக்கம் அதிகமாக உள்ளது. குறிப்பாக, நீர்பிடிப்பு பகுதிகளான அவலாஞ்சி, எமரால்டு, அப்பர்பவானி ஆகிய பகுதி களில் பலத்த சூறாவளி காற்றுடன் மழை வெளுத்து வாங்குகிறது. பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் எடுத்துள்ளது.

இந்நிலையில், ஊட்டி கூடலூர் தேசிய நெடுஞ் சாலையில் நடுவட்டம் அருகே தவளை மலை பகுதியில் சுமார் 30 அடி உயரத்தில் உள்ள மூன்று



ராட்சத பாறைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இது எந்த நேரத்திலும் சரிந்து விழும் அபாயம் உள்ளது.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக இச்சாலையில் கனரக வாகனங்கள் செல்ல முற்றிலும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அரசு பேருந்துகள் பகல் நேரங்களில் மட்டும் இயக்கப்பட உள்ளது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அந்த வழித்தடத்தில் அரசு பேருந்துகள் இயக்கப்படும். அவசர தேவைகளுக்கு செல்லும் ஆம்புலன்ஸ், தீயணைப்புத்துறை வாகனங்கள் மட்டும் பாதுகாப்புடன் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் உள்ளூர் வாகனங்கள் போலீஸாரின் அறிவுறுத்தலின் பேரில் அனுமதிக்கப்படும். இரண்டு நாட்கள் கனமழை பெய்யும் என எச்சரிக்கப்பட்டுள்ளதால் ஊட்டியில் உள்ள அரசு தாவரவியல் பூங்கா உட்பட அனைத்து சுற்றுலா தளங்களும் மூடப்பட்டுள்ளன.

இரண்டு நாட்கள் கனமழை பெய்யும் என்பதால் பொதுமக்கள் யாரும் தேவையின்றி வெளியில் வர வேண்டாம். பாதுகாப்புடன் இருக்க வேண்டும். சுற்றுலா பயணிகள் பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா கூறும்போது, "ஊட்டி - கூடலூர் சாலையில், நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதியில் கோட்டாட்சியர் தலைமையில் அதிகாரிகள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பேரிடர் மேலாண்மை குழுவினர் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் அங்கு பணியில் உள்ளனர். நெடுஞ்சாலைத் துறையினர் ஜே.சி.பி வாகனங்களை வைத்து நிலச்சரிவு ஏற்பட்டால் உடனுக்குடன் அகற்ற தயார் நிலையில் உள்ளனர். எனவே பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை.

மழை பாதிப்புகள் ஏதேனும் ஏற்பட்டால், பொதுமக்கள் உடனுக் குடன் 1077 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும் அண்டை மாநிலங்களில் உள்ள ஆட்சியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து வரும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்புடன் பயணிக்க அறிவுரை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடலூர், கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் தற்போதைக்கு முதுமலை, மசினகுடி சாலைகளை ஊட்டி வர பயன்படுத்தலாம். மேலும் ஏற்கனவே, ஊட்டி - கூடலூர் வழித்தடத்தில் உள்ள ஃபைன் பாரஸ்ட், பைக்காரா, சூட்டிங் மட்டம் ஆகிய சுற்றுலாத்தலங்களும் மூடப்பட்டுள்ளன" என்றார்.

மரங்கள் விழுந்து பாதிப்பு: பலத்த காற்றுடன் பெய்து வரும் மழை காரணமாக பல்வேறு இடங்களிலும் சாலைகளில் மரங்கள் விழுதல், மண்சரிவு, மின் துண்டிப்பு, வீடு சேதம் உட்பட்ட இடர்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன. தேசிய, மாநில பேரிடர் தடுப்பு படையினருடன் தீயணைப்பு, நெடுஞ் சாலை துறையினர் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மழைக்கு இதுவரை, 19 வீடுகள் சேதமாகியுள்ளன.

கடந்த 6 நாட்களில் மட்டும் மாவட்டம் முழுவதும் பல்வேறு சாலைகள், குடியிருப்பு பகுதிகளில் விழுந்த 100க்கும் மேற்பட்ட மரங்களை தீயணைப்புத்துறையினர் வெட்டி அகற்றி உள்ளனர். அபாயகர மரங்கள் உள்ள பகுதிகளில் சாலைகளில் விழுந்த மரங்களை கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் அகற்றும் பணியை மேற் கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து மாவட்ட தீயணைப்பு அலுவலர் கிருஷ்ணமூர்த்தி கூறும்போது, 'நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழை பாதிப்புகளை எதிர்கொள்ள தீயணைப்புத்துறை தயார் நிலையில் உள்ளது. கடந்த 5 நாட்களில் மாவட்டம் முழுவதும் விழுந்த மரங்கள் உடனுக்குடன் அகற்றப்பட்டன. பேரிடர் மீட்பு பணிக்காக ஈரோடு, திருப்பூரில் இருந்து 25 தீயணைப்பு வீரர்கள் நீலகிரி வந்துள்ளனர். அவர் கூடலூரில் முகாமிட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்' என்றார்.

மழை அளவு: நீலகிரி மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டர்)

| | |
|---|---|
| அவலாஞ்சி | 190 |
| அப்பர்பவானி | 125 |
| பாலகொலா | 77 |
| குந்தா | 66 |
| கூடலூர் | 66 |
| சேரங்கோடு | 62 |
| நடுவட்டம் | 62 |
| பந்தலூர் | 54 |
| பாடந்தொரை | 52 |
| எமரால்டு | 50 |
| கிளன்மார்கன் | 48 |
| ஓவேலி | 46 |
| குன்னூர் | 22 |
| ஊட்டி | 16.2 |
| பர்லியார் | 6 |

# "பஹல்காமில் பயங்கரவாதிகள் நிகழ்த்தியது மனிதகுலத்தின் மீதான தாக்குதல்" பிரதமர் மோடி

**புதுடெல்லி, மே.30–**

பஹல்காமில் பயங்கரவாதிகள் நிகழ்த்தியது மனிதகுலத்தின் மீதான தாக்குதல் என்றும், இந்தியாவில் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் ஒரு பொருத்தமான பதிலடி என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சிக்கிம் மாநிலம் உதயமானதன் 50ம் ஆண்டு விழாவில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி அம்மாநிலத்துக்குச் செல்ல இருந்தார். எனினும், சீரற்ற வானிலை காரணமாக அவரது பயணம் ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து அவர் காணொலி காட்சி வாயிலாக நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்.

அப்போது பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "வடகிழக்கு பகுதியை வளர்ச்சியின் மையமாக அரசு கொண்டு வந்துள்ளது. ஏழைகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் என்னும் நான்கு வலுவான தூண்களில் வளர்ச்சி அடைந்த இந்தியா என்பது உருவாக்கப்படும். சிக்கிம் விவசாயிகளுக்கு திறந்த மனதுடன் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஏனெனில், இன்று முன்னேறி வரும் விவசாயத்தின் புதிய போக்கில் சிக்கிம்



முன்னணியில் உள்ளது. சிக்கிமின் இயற்கை மீன்வளத் தொகுப்பை ஊக்குவிக்க, சிக்கிமில் நாட்டின் முதல் இயற்கை மீன்வளத் தொகுப்பை மத்திய அரசு உருவாக்கி வருகிறது. இது சிக்கிம் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும்.

டெல்லியில் நடந்த நிதி ஆயோக் நிர்வாகக் குழு கூட்டத்தின் போது, ஒவ்வொரு மாநிலமும் சர்வதேச அளவில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளக்கூடிய சுற்றுலா தலங்களை உருவாக்க வேண்டும் என்று நான் கூறினேன். சிக்கிம் உலகளாவிய சுற்றுலா தலமாக மாற வேண்டிய நேரம் வந்துவிட்டது. மாநாடுகள், நல்வாழ்வு மற்றும் இசை நிகழ்ச்சி சுற்றுலாவின் மையமாக சிக்கிமை மாற்றுவதே எங்கள் கனவு. சிக்கிமின் திறனை உலகம் புரிந்துகொள்ளும் வகையில் ஜி20 கூட்டங்களை நாங்கள் நடத்தினோம்.

இந்தியாவை விளையாட்டு வல்லரசாக மாற்றுவதற்கு தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சிக்கிம் சாகச மற்றும் விளையாட்டு சுற்றுலா வளர்ச்சிக்கு உகந்த ஆற்றலைக் கொண்டுள்ளது. வடகிழக்கு மாநிலங்கள் இந்த திசையில் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

கடந்த மாதம் பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவில் பயங்கரவாதத்தை கட்டவிழ்த் துவிட்டவர்களுக்கு ஒரு பொருத்தமான பதிலடி. பஹல்காமில் பயங்கரவாதிகள் செய்தது மனிதகுலத்தின் மீதான தாக்குதல், இப்போது பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் ஒன்றுபட்டுள்ளோம்.

சிக்கிம் நமது நாட்டின் பெருமை. அதன் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். சிக்கிம் 50 ஆண்டுகளுக்கு முன்பே தனக்கென ஒரு ஜனநாயக எதிர்காலத்தை முடிவு செய்தது. இந்த 50 ஆண்டுகளில், இந்தியாவின் வானத்தை ஒளிரச் செய்த நட்சத்திரங்கள் சிக்கிமில் இருந்து தோன்றியுள்ளன.

சிக்கிம் முன்னேற்றத்தின் முன்மாதிரியாக மாறியுள்ளது. மேலும், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் செழுமையின் சின்னமாக உருவெடுத்துள்ளது.

இந்தியா விரைவில் விளையாட்டு வல்லரசாக மாறும். சிக்கிம் மற்றும் வடகிழக்கு இளைஞர்கள் இந்தக் கனவை நனவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பார்கள். சிக்கிம் நமக்கு பைச்சுங் பூட்டியா போன்ற கால்பந்து ஜாம்பவான்களையும், தருண்தீப் ராய் போன்ற ஒலிம்பியன்களையும், நாட்டைப் பெருமைப்படுத்திய ஜஸ்லால் பிரதான் போன்ற வீரர்களையும் கொடுத்தது. சிக்கிமில் உள்ள ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரத்திலிருந்தும் ஒரு சாம்பியன் உருவாக வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்" என தெரிவித்தார்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் சிவகங்கை**
**ஒ.மு.ஆ.1/8679/2022**

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் காளையார் கோவில் வருவாய் க.எண் 2487/1 திருநகர் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.வள்ளி த/பெ.சங்கையா என்பவர் தனது தந்தை சங்கையா த/பெ அழகுக்கோன் என்பவர் கடந்த 04/05/1983 அன்று இறந்துவிட்டார் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை இந்த இறப்பினை பதிவு செய்ய கேட்டு சிவகங்கை உட்கொண்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை உட்கொண்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம் அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விவரம் இதன் மூலம் அறிவிக்கலாகிறது.

எதிர்மனுதாரர்

1. வட்டாச்சியர் அவர்கள், காளையார் கோவில் வட்டாச்சியர் அலுவலகம்.

2. இணை சார் பதிவாளர் எண் 1.அவர்கள் காளையார் கோவில்'

**வழக்கறிஞர் நவநீதன் MA.BL**



# காட்பாடி அருகே பரிதாபம், குடிநீர் தொட்டி பள்ளத்தில் தவறி விழுந்த அக்கா, தம்பி பரிதாபம்

வேலூர், மே.30-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலம்பட்டு கிராமம் கொல்லைமேடு கிராமத்தை சேர்ந்த மணிகண்டன் (வ40) இவரது மனைவி ப்ரியா இவர்களின் குழந்தைகள் பிரித்தி (வயது 10) ரபிஸ்வரன் (வயது 5) என்ற மகனும் உள்ளனர். கோடை விடுமுறையில் வீட்டில் உள்ளனர். தற்போது வசிக்கும் வீட்டின் பின்புறம் புதிய வீடு கட்ட, தண்ணீர் சேமிக்க 7 அடி ஆழத்தில் 2 பள்ளங்களை வெட்டி இருந்ததாக கூறப்படுகிறது. மழையின் காரணமாக பள்ளத்தில் நீர் நிரம்பிய நிலையில் 28-05-2025 அன்று பிரித்தி, ரபிஸ்வரன் ஆகியோர் விளையாடிக் கொண்டிருந்தபோது பள்ளத்தில் தவறி விழுந்து நீரில் முழங்கி உயிரிழந்துள்ளனர். இதுகுறித்து தகவலறிந்த லத்தேரி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்துவருகின்றனர். அக்கா. தங்கை இறந்த சம்பவம் குடும்பத்தினரிடையே மற்றும் இப்பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# தாம்பரத்தில் மண்ணின் மைந்தர்கள் கழகம் சார்பில் அயோத்திதாச பண்டிதர் பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்

தாம்பரம், மே.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தேசிய சித்தா மருத்துவமனையில் உள்ள அயோத்திதாச பண்டிதர் சிலைக்கு மண்ணின் மைந்தர்கள் கழகம் சார்பில் மாநிலத் தலைவர் பி.அருண் அவர்கள் ஏற்பாட்டில் அயோத்திதாச பண்டிதர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப் பாளராக தேசியத் தலைவர் ஏ.எஸ். செல்வராஜ், தேசிய பொதுச் செயலாளர் என்.பழனிவேல், தேசிய செயலாளர் அஸ்வின் ஆகியோர் கலந்து கொண்டு அயோத்திதாச பண்டிதர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து சிறப்பு உரையாற்றினார்கள் மாநிலத் துணைத் தலைவர் மகிமை தாஸ் முகமது அலி தேசியா, ஜோயல், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செய்தனர் அதனைத் தொடர்ந்து இறுதியில் மாநில வழக்கறிஞர் அணி தலைவராக அவர்களுக்கு பதவி வழங்கப்பட்டது.




# இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1434ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)

## மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் நடைபெற்றது

ராமநாதபுரம், மே.30

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1434 பசலிக்கான ஜமாபந்தி 20.05.2025 தேதி முதல் 29.05.2025 வரை நடைபெற்றது. இறுதி நாளான நேற்றுயதினம் 29.05.2025 காக்கூர் உள்வட்டத்திற்கு உட்பட்ட காக்கூர், புளியங்குடி, பொசுக்குடி, கருமல், குமாரக்குறிச்சி, பிரபுக்க;ர் ஆகிய கிராமங்களுக்கு வருவாய் தீர்வாயம் நடைபெறுகிறது. இதில் மேற்கண்ட கிராமங்களின் கிராம கணக்குகளான அடங்கல், பட்டாமாறுதல்கள், உட்பிரிவு மாறுதல்கள், முதியோர் ஓய்வூதியர்கள் பதிவேடு உள்ளிட்ட கிராமக் கணக்குகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் 17 பயனாளிகளுக்கு பட்டாமாறுதல் உட்பிரிவு, 10 பயனாளிகளுக்கு பட்டாமாறுதல் (முழுப்புலம்), 07 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டை, 08 பயனாளிகளுக்கு முதியோர் மற்றும் இதர உதவித்தொகை என மொத்தம் 42 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும் பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, பட்டாமாறுதல் மனுக்களை பெற்றுக்கொண்டதுடன், மனுக்கள் மீது உரிய பரிசீலனை மேற்கொண்டு காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது முதுகுளத்தூர் வட்டாட்சியர் கோகுல்நாத் தனி வட்டாட்சியர் (ச.பா.தி) .மரகத மேரி மற்றும் மண்டல துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# குன்னூர் மார்க்கெட் விவகாரம் தற்காலிக கடைகளில் அளவீடு மாற்றம் செய்யலாம்: மார்க்கெட் கடைகள் இடித்து கட்டப்படுவது உறுதி நகர மன்ற கூட்டத்தில் ஆணையர் விளக்கம்

குன்னூர், மே.30-

குன்னூர் நகர மன்ற மாதாந்திர கூட்டம் தலைவர் சுசீலா தலைமையிலும், ஆணையர் இளம்பரிதி முன்னிலையிலும் நேற்று நடந்தது. துணைத் தலைவர் வாசிம் ராஜா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள் வருமாறு:

ராமசாமி( திமுக) கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் இரண்டு தீர்மானங்களை நிறுத்தி வைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது ஆனால் இந்த கூட்டத்தில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. குறிப்பாக உழவர் சந்தை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக கடைகள் மிகவும் சிறியதாக இருப்பதால் இந்த கடைகளில் வியாபாரிகள் எப்படி வியாபாரம் செய்ய இயலும்,இதற்கு மாற்று ஏற்பாடாக டி டி கே சாலையில் உள்ள வருவாய் துறைக்கு சொந்தமான இடத்தில் கடைகள் அமைக்கலாம், இதேபோல் பிக்கப் ஸ்டாண்ட் மற்றும் விபி தெரு பகுதிகளில் மாற்றுக் கடைகள் ஏற்படுத்தலாம்,மார்க்கெட் கடை விவகாரம் தொடர்பாக தனிக்குழு அமைத்து மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து விவரத்தை எடுத்துக் கூறி வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேபோல் மண்டல பொறுப்பாளராக அமைச்சர் செந்தில் பாலாஜி இந்த மாவட்டத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார்.இதில் மண்டல பொறுப்பாளர் மற்றும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் நீலகிரி எம்பி ஆகியோர் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் குன்னூர் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளுக்கும் தேவையான முக்கிய பணிகள் குறித்து திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து வழங்கும் பட்சத்தில் ஒரு வாரத்திற்குள் வளர்ச்சிப் பணிகளுக்கு உண்டான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தெரிவித்துள்ளனர். எனவே இது தொடர்பான நடவடிக்கையை நகராட்சி அதிகாரிகள் விரைவு படுத்த வேண்டும். ஜாகிர் உசேன்( திமுக) குன்னூர் மார்க்கெட் கடைகளை இடித்துக்கட்டும் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வியாபாரிகள் குன்னூர் சப் கலெக்டர் முதல் மாவட்ட கலெக்டர் மற்றும் அமைச்சர்கள் இடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அரசு நலத்திட்ட பணிகளை யாரும் தடுக்கவில்லை. ஆனால் தற்காலிக கடைகள் என்ற பெயரில் உழவர் சந்தை பகுதி கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு வியாபாரிகள் செல்ல இயலாது எந்தவிதமான வாகன வசதிகளும் இல்லாத சூழ்நிலையில் மக்கள் அந்த இடத்திற்கு சென்று கொண்டு போய் வாங்க ஆர்வம் காட்ட மாட்டார்கள் எனவே மீண்டும் வியாபாரிகள் அழைத்து கலந்துரையாடல் மூலமாக அவருடைய தேவைகளை அறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மணிகண்டன்( திமுக) டி டி கே சாலை குண்டும் குழியுமாக காட்சி அளிக்கிறது.தற்போது தொடர் மழை பெய்து வருவதால் இருசக்கர வாகன ஓட்டிகள் கீழே விழுந்து செல்கின்றனர். பலமுறை இந்த பகுதியை சீரமைத்தாலும் இன்று வரை மக்கள் பாதித்து வருகின்றனர் எனவே இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். சரவணக்குமார் (அதிமுக) குன்னூர் பஸ் நிலையப் பகுதியில் வாட்டர் ஏடிஎம் வைக்க வேண்டும், நகரப் பகுதியில் தெரு நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த வேண்டும், எம்ஜிஆர் நகர் பகுதியில் தூய்மை பணியாளர்கள் சரிவர வராததால் அந்தப் பகுதியில் குப்பைகள் அதிக அளவில் தேங்கியுள்ளது இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குருமூர்த்தி (அதிமுக) தொடர் மழை பெய்து வரும் நிலையில் குன்னூர் மார்க்கெட் வியாபாரிகளுக்கு நாள்தோறும் நோட்டீஸ் வழங்குவதாக கூறி அதிகாரிகள் மிரட்டுவதை தவிர்க்க வேண்டும் மேலும் ஒரு மூன்று மாதத்திற்கு அவகாசம் அவர்களுக்கு கொடுக்க வேண்டும்,இதேபோல் ஒவ்வொரு வார்டுகளிலும் நகராட்சி ஊழியர்கள் தொடர்ந்து கண்காணித்து மின் கம்பம் மற்றும் மின்கம்பிகள் மீது விழுந்த மரக்கிளைகள் மட்டுமல்லாமல் ஆபத்தான மரங்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதற்கு பதில் அளித்த ஆணையர் இளம் பருதி பேசுகையில்: மார்க்கெட் கடை விவகாரம் தொடர்பாக ஏற்கனவே உழவர் சந்தை பகுதியில் தற்காலிக கடைகள் அமைத்து இறைச்சி மற்றும் காய்கறி,பூ, டைலர் கடைகள் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கடைகளின் அளவீட்டில் மாற்றம் இருக்கும் பட்சத்தில் வியாபாரிகளின் கருத்துக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.மேலும் ஐயுடிபி காம்ப்ளக்ஸ் பகுதியில் நகை கடைகள்ஏற்படுத்தப் படும் எக்காரணத்தை கொண்டும் அரசின் புதிய கடைகள் கட்டும் பணி நிறுத்தப்படாது. கடந்த வாரம் குன்னூர் சப் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் வியாபாரிகள் இந்த திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ன வலியுறுத்தினர். ஆனால் திட்டமிட்டபடி பணிகள் துவங்கும். நகரப் பகுதியில் தெரு நாய்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தனி குழு அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் கடை விவகாரத்திற்கும் அனைத்து உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து ஆலோசனை பெரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தாவெக குரோம்பேட்டை பகுதி 28வது வார்டு சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

குரோம்பேட்டை, மே.30-

உலகப் பட்டினி தினத்தைப் யொட்டி பட்டினி இல்லா உலகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தாவெக தலைவர் விஜய் உத்தரவும்படி கடந்த இரண்டு வருடங்களாக தமிழக முழுவதும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

அந்த வகையில் மே 28 தேதியான அன்று உலக பட்டினி தினத்தை ஒட்டி தாவெக பொதுச் செயலாளர் என்.ஆனந்த அவர்களின் ஆணைக்கிணங்க செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வி.குமார் அவர்களின் அறிவித்துள்ளின்படி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட குரோம்பேட்டை பகுதி 28வது வார்டு சார்பில் குரோம்பேட்டை மகேந்திரன் ஏற்பாட்டில் அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் குரோம்பேட்டை ஆசியா மகேந்திரன் கலந்துகொண்டு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ட்ரஸ்டில் காலை உணவு வழங்கினார்கள் இதில் பகுதி கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தன.

# ரயில் பராமரிப்பு பணி காரணமாக ஜுன் 1ம் தேதி மின்சார ரயில் சேவை மாற்றம்

சென்னை, மே.30-

ரயில் பராமரிப்பு பணி காரணமாக ஜுன் 1ம் தேதி மின்சார ரயில் சேவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காட்டாங்குளத்தூர் பணிமனையில் ஜுன் 1ல் காலை 11.45 முதல் பிற்பகல் 3.15 வரை பராமரிப்புப் பணி நடக்கிறது. சென்னை கடற்கரை ஞ செங்கல்பட்டு செல்லும் மின்சார ரயில்கள் கூடுவாஞ்சேரி வரை பகுதியளவு ரத்து செய்யப்பட்டுள்ளது.



# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு குன்னூர் முதியோர் இல்லத்தில் த வெ க சார்பில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது

குன்னூர், மே.30-

தமிழக வெற்றிக் கழக கட்சியின் சார்பாக நீலகிரி கிழக்கு மாவட்ட கழக தலைவர் ரமேஷ் மற்றும் நீலகிரி கிழக்கு மாவட்ட கழகத் மாவட்டச் செயலாளர் பாமா ரமேஷ், மேற்பார்வையில்

குன்னூர் நகர செயலாளர் விவேக் ஆனந்த் தலைமையில் நேற்று உலக பட்டினி தினத்தினை முன்னிட்டு குன்னூர் பாலகிலவா சகாய மாதா ஆதரவற்றோர் முதியோர் காப்பகத்தில் உள்ள 100 முதியவர்களுக்கு காலை சிற்றுண்டியாக பொங்கல், சாம்பார் சட்னி, வடை, கேசரி, பழங்கள் வழங்கப்பட்டது . இதில் கழக நிர்வாகிகள் நகரச் செயலாளர் விவேக் ஆனந்த், ஒன்றிய செயலாளர் சுரேஷ், நகரப் பொருளாளர் பேரக்ஸ் தாஸ், நகர துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் அற்புதமணி, சூர்யா , ஒன்றிய பொருளாளர் அக்கீம் பாட்சா, வர்த்தக அணி அமைப்பாளர் நெஸ்ட் தாஸ், கொள்கை பரப்பு அணி அமைப்பாளர் தேவா டேனியல், தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பிரின்ஸ், விஜய், சஞ்சீவ், குன்னூர் நகர செயற்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் சரவண குமார், ஜுட் என்ஜிலோ, ஆனந்த பாலன், நவநீதன், அன்சாத், சரவணன், மேரி சந்தியா, காயத்ரி, நகர இளைஞ ரணி நிர்வாகிகள், செல்வகுமார் மற்றும் கிளை நிர்வாகிகள் வினிஸ்,தினேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



■ விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு வட்டத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் மூலம் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மற்றும் அரசின் சேவைகள் குறித்து நடைபெற்று வரும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களின் ஆய்வுப் பணிகளில் 28.05.2025 அன்று நள்ளிரவு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, இரவுப்பணியில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் வருகை குறித்தும், மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்தும், அவசர சிகிச்சை, பச்சிளம் குழந்தை பிரிவு உள்ளிட்டவைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161